**STARTING TIME 11.57 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 207/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 04.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **மனோகரன்** | Father's Name | : |
| Address | : | | |
| Calling | : | Age | : |

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. எனது பெற்றோருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால், 6 பேர். அதில் நான் எத்தனையாவது வாரிசு என்றால், நான் தான் மூத்தவர் ஆவேன். கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், பாகம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ரத்து செய்ய பரிகாரம் கேட்டுள்ள கிரைய பத்திரத்தை யார் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், எனது அம்மா கமலம்மாள் என்பவர் எனது தங்கை பூங்கொடி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்டுள்ளேன். அந்த கிரைய பத்திரம் 1992ம் ஆண்டு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த கிரையத்தின் போது எனது தங்கை பூங்கொடியின் வயது என்னவென்றால், அதுபற்றி தெரியாது.**

**2. எனது அம்மாவுடன் வேறு யார் கிரைய பத்திரத்தை சேர்ந்து எழுதி**

கொடுத்தது என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தை எனது அம்மா அவருக்காகவும், இளவராக இருந்த பாக்கியரதி என்பவருக்காகவும், ஏழுமலை குமாரர்கள் எவெரெஸ்ட் மற்றும் அசோக்குமார் மற்றும் ஏழுமலையின் மகள் பூங்குழலி என்பவரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து குடும்ப நலனுக்காக வேண்டி கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

3. மேற்படி கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்த சொத்தானது எனது தாயாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால், 1972 ம் ஆண்டு அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட நிலமாகும். ஒப்படைவு பெற்ற 20 ஆண்டுகளுக்கு பிறகு, அந்த நிலத்தை எனது தாயார் அவரது மகளான 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளது சட்டத்திற்கு உட்பட்ட செயல் என்றால், சரியல்ல.

4. எனது பெற்றோருக்கு குடும்பத்தின் நலனுக்காக வேண்டி நான் எந்த வகையில் உதவி செய்தேன் என்றால், நான் ஓவியம் வரையும் தொழில் மூலமாகவும், வெளிநாடு சென்று வேலை செய்தும் சம்பாதித்த பணத்தை குடும்பத்தின் நலனுக்காக வேண்டி எனது பெற்றோரிடம் கொடுத்தேன். வெளிநாட்டில் எத்தனை வருடங்கள் வேலை செய்தேன் என்றால், 7 வருடங்கள் வேலை செய்தேன். வெளிநாட்டில் வேலை செய்த போது எனது பெற்றோருக்கு பணத்தை எப்படி அனுப்புவேன் என்றால், வங்கி மூலம் அனுப்புவேன். அவ்வாறு வங்கி மூலம் பணத்தை அனுப்பியதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது தாயார் அவரது சொந்த உழைப்பின் மூலம் வந்த பணத்தை கொண்டு என்னை வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பினார் என்றும் ஆனால் அவருக்கு நான் எந்தவித பண உதவியும் செய்யவில்லை என்றால், சரியல்ல.

5. கிரைய பத்திரத்தையும், பட்டாவையும் ரத்து செய்ய வேண்டி எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், 2018 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். 1992 ம் ஆண்டு பதிவு செய்து கொடுத்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி 2018 ம் ஆண்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். (காலவரையறை குறித்து பிரதிவாதிகள் தரப்பு பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லாததால், மேற்படி கேள்விக்கு வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

6. எனது தாயார் அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு உரிய பிரதிபலனை பெற்றுக்கொண்டு தான் கிரைய பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு திருமணத்தின் போது சரியாக சீர் செய்யாத காரணத்தால், எனது மற்ற உடன் பிறந்தவர்களும் அதற்கு ஈடாக சேர்ந்து கிரையப்பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

7. எனது தாயார் பெயருக்கு அரசாங்கம் ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்தை குடும்ப உறுப்பினரும், எனது சகோதரியுமான 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்ததை அரசால் எவ்வித தடையும் இல்லை என்றால், சரியல்ல. நான் சொல்லும் அரசாணை 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த கிரையத்தை எவ்வகையிலும் பாதிக்காது என்றால், சரியல்ல.

8. எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரையத்தின்பேரில், கிரைய சொத்தை 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டாரா, இல்லையா என்றால், இல்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியான அந்த கிரைய சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால், எனது அனுபவத்தில்தான் உள்ளது.

9. 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் செய்து கொடுத்த சொத்தில் நான் வியாபார நிறுவனம் ஏதேனும் நடத்தி வருகிறேனா என்றால், நான் அதில் ஓட்டல் கட்டி வாய்மூலமாக வேறு ஒருவருக்கு குத்தகைக்கு விட்டுள்ளேன். மாத குத்தகையா அல்லது வருட குத்தகையா என்றால், மாதம் ரூ.100 க்கு குத்தகைக்கு விட்டேன்,

ஆனால் இதுநாள் வரை வாடகை கொடுக்கவில்லை. எந்த வருடம் அதுபோல் குத்தகைக்கு விட்டேன் என்றால், வீடு மற்றும் கடை இரண்டையும் கட்டி 1982ம் ஆண்டு முதல் சொத்தை பாதுகாப்பதற்காக வேண்டி குத்தகைக்கு விட்டேன். வீடு மற்றும் கடையை கட்ட அரசாங்கத்தில் கட்டிட அனுமதி வாங்கினேனா என்றால், இல்லை, ஓடு வீடு தான் கட்டினேன்.

10. எனது அனுமதியின் பேரில் வாடகைக்கு ஓட்டல் தொழில் வேறு ஒருவர் நடத்தி வருகிறார் என்று சொல்கிறேன் என்றால், சரிதான். அந்த இடத்தில் எனது உடன் பிறந்தவர்கள் யாரும் வருகிறார்களா என்றால், இல்லை. தாவா சொத்தில் உள்ள வீடு மற்றும் கடைக்காக வேண்டி நான் மாதம் ரூ.25000/– வரை வாங்கி வருகிறேன் என்றால், சரியல்ல. வாடகை தொகையை நான் வாங்கி கொண்டு என் உடன் பிறந்தவர்களுக்கான சட்டப்படியான உரிமையை நான் மறுத்து வருகிறேன் என்றால், சரியல்ல.

11. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் சுவாதீனத்தில் உள்ளவர்கள் எனக்கு உறவினர்களா என்றால், ஆமாம், எனது மனைவியின் சித்தி ஆவார். அவர் எனது உடன் பிறந்தவர்களுக்கு எவ்வகையிலும் உறவினர் இல்லை என்றால், சரிதான். எனது உறவினர்களை தாவா சொத்தில் விட்டுவிட்டு, எனது உடன் பிறந்தவர்களின் சட்டப்படியான உரிமையை நான் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ENDING TIME 12.47.P.M.

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam
Digitally signed by G YUVARAJ
Date: 2025.01.04 17:36:11 +0530